தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 326 - சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த

நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டன..

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வெளியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டு யூன் 28 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பந்தி 07 இன் படி, ஒவ்வொரு நிறுவனத்தினாலும் கொள்வனவு செய்யப்படும் மற்றும் அகற்றப்படும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் சம்பந்தப்பட்ட காலாண்டின் முடிவில் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், மீளாய்வுக்குட்பட்ட	2024 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 05 கைவிரல் அடையாள இயந்திரங்கள் (Fingerprint Machines) மற்றும் (UNODC) நிறுவனத்தின் நன்கொடையாகப் பெறப்பட்ட 50 கணினிகள் (Computers) தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் திணைக்களத்திற்கு 2024 ஆம் ஆண்டில் அறிவிக்கப்படவில்லை என்றும், குறித்த தகவல்கள்	குறித்த சுற்றுநிருபம் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வருடத்தில், ACA-6 படிவத்தின்படி, நிதிசாராச் சொத்துக்களின் கீழ் உள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப இருப்பில் ரூபா.17,563,795 பெறுமதியான சொத்துக்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா.9,706,405 பெறுமதியுடைய சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் மட்டுமே ஆண்டில் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.	இவ்வருடத்தில் (2025) சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.	சொத்துகளின் சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், UNODC வழங்கிய வெளிநாட்டு நிதியுதவிகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா. 19,968,568 பெறுமதியுள்ள இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், அந்த ஆண்டின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் அல்லது ஒதுக்கத்தில் சேர்க்கப்படவில்லை.	அந்த தகவலை 2024 ஆம் ஆண்டில் கணக்கில் எடுத்துக்கொள்வது சாத்தியமில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, அரச கணக்குகள் திணைக்களம் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி, UNODC வழங்கிய வெளிநாட்டு நிதியுதவிகளின் கீழ் கிடைத்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை CIGAS திட்டத்தில் சொத்துகளாக சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்படவில்லை என்றும், மேலும் சில ஆவணங்கள் முறையாகவும், புதுப்பிக்கப்பட்டும் பேணப்படவில்லை என்றும் மாதிரி கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்புகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	**பிணைகள் பதிவேடு**		
	நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு, அந்த உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் அதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு நீதி அமைச்சின் செயலாளருக்கு 2025 மார்ச் 07 ஆம் திகதி	நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான

	அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும்.

(ii) **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**

நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	சம்பந்தப்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், தாமதத்தின் காரணமாக நட்டங்கள் மற்றும் இழப்புகள் பதிவேட்டில் உள்ளடக்க முடியவில்லை என்றும், இவ்வருடத்தில் அந்த தகவல்களைப் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.	நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா.50,000,000 ம் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது, இதில் ரூபா.34,578,585 பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. இந்த மீதம் மேலதிக மதிப்பீட்டின் சதவீதத்தில் 69 சதவீதமாக இருந்தது.	UNODC நிறுவனத்திடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட கணினி இயந்திரங்கள் உரிய திகதியில் காணப்பட்ட உண்மையான பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட உண்மையான வரிச் செலவு என்பன திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கத் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பப்பட்டு, அந்த உண்மையான பெறுமதி	உரிய ஆய்வுகளின் பின்னர் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்

		கணக்குகளில் பதியப்பட்டுள்ள-தாகவும், திணைக்களத்தின் தேவைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பாக திணைக்களத்திற்கு எந்தவிதமான அறிவித்தலும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டது.	
(ஆ)	மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், 14 செலவினத் தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.73,375,000 நிதியொதுக்கீட்டில், ரூபா.41,135,005 நிதியொதுக்கீடு எஞ்சியிருந்தது. செலவினத் தலைப்புகளில் இவ்வாறு மீதமிருந்ததன் சதவீதம் 11 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சுக்குள் காணப்பட்டது.	அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உத்தியோகத்தர்களின் விடுமுறை நாட்களுக்கான வருகைகள் மற்றும் மேலதிக நேரத்தைக் கட்டுப்படுத்தல், வெளிநாட்டுப் பயிற்சிகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களுக்கு Casual Allowance மாத்திரம் வழங்குதல், களப் பரிசோதனை நடவடிக்கைகள் மற்றும் மாதாந்த/இரு-மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை இணைய வழி (நிகழ்நிலை) தொழில்நுட்பத்தின் ஊடாக நடாத்துதல், சீருடைக் கொடுப்பனவு (Uniform Allowance) வழங்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை மற்றும் மேல் நீதிமன்றம் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் அவ்வாறே பயன்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் நிதியொதுக்கீடுகள் மீதமிருந்ததாக அறிவிக்கப்பட்டது.	உரிய ஆய்வுகளின் பின்னர் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(இ)	மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், 5 செலவினத் தலைப்புகளுக்காக நிதி பிரமாணம் 66 இன்படி ரூபா.1,705,000 மாற்றீடு செய்யப்பட்டிருந்தது அவ்வாறு மாற்றீடு செய்யப்பட்ட நிதியொதுக்கீடுகளில் ரூபா.451,765 பயன்படுத்தப்படாமல் மீதமிருந்தது, அதாவது 10 சதவீதம் தொடக்கம் 135 சதவீதம் வரையான மீதங்கள்	2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கோரப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை அவ்வாறே கிடைக்காத காரணத்தால், இந்த செலவினத் தலைப்புகளுக்கான நடவடிக்கைகளை தொடர மேலதிக நிதி ஒதுக்கீடு நிதிப் பிரமாணம் 66 இன்கீழ் மாற்றீடு செய்யப்பட்டிருந்த போதிலும்,	உரிய ஆய்வுகளின் பின்னர் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்

	காணப்பட்டன.	பல்வேறு காரணங்களால் அதில் ஒரு பகுதி மீதமிருந்ததாக அறிவிக்கப்பட்டள்ளது.	
(ஈ)	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏற்பாடு செய்துள்ள நிதி ஒதுக்கீட்டு எல்லைக்குள் செலவினங்களை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், 4 செலவினத் தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.6,100,000 நிதியொதுக்கீட்டுடன் மேலதிகமாக, நிதி பிரமானம் 66 இன் கீழ் வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.1,355,000 நிதியொதுக்கீடு மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. செலவினத் தலைப்புகளுக்கு இடையில் இவ்வாறு மாற்றீடு செய்யப்பட்டதின் சதவீதம் 9 சதவீதத்திலிருந்து 39 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.	இந்த நான்கு செலவு விடயங்களுக்காக 2024 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடுகள் மூலம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்ட ஒதுக்கீடுகள் அவ்வாறே கிடைக்கப்பெறாமையால் நிதி பிரமானம் 66 இன் கீழ் மேலதிக ஒதுக்கீடுகள் மாற்றம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது	உரிய ஆய்வுகளின் பின்னர் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(உ)	நிதி பிரமானம் 50 இன் படி, மதிப்பீடுகள் இயன்றவரை சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டுமயரினும், அவ்வாறு செய்யாத காரணத்தினால் மொத்த நிகர ஒதுக்கீட்டுக்கும் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுக்கும் இடையிலான வித்தியாசம், மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டின் சதவீதமாக (63 சதவீதம்) தொடக்கம் 3,653 சதவீதம் வரையிலான ஒரு வீச்சில் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் மூலம் வேண்டுகோள் முன்வைக்கப்பட்ட நிதி கிடைக்காமையினாலும், அரச செலவினச் சுற்றறிக்கையின்படி செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டதாலும் திணைக்களத்தின் மொத்த நிகர ஒதுக்கீட்டிற்கும் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டிற்கும் இடையில் வித்தியாசம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	உரிய ஆய்வுகளின் பின்னர் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்
(ஊ)	மீளாய்விற்கான ஆண்டின் நிதிநிலை கூற்றுகளின் படிவம்- ஏசீஏ-2(ii) இல், நிதி பிரமானம் 208-இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள்-/திணைக்களங்களால் ஏற்கப்பட்ட செலவுகள் என்ற நிரலின் கீழ், மொத்த செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா. 44,476,921 ஆக இருந்தபோதிலும், அது ரூபா. 24,508,352 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.	படிவம் ஏசீஏ-2(ii) இல் நிதி பிரமானம் 208-இன் கீழ் ஏனைய அமைச்சுக்கள்-/திணைக்களங்கள் என்பவற்றால் ஏற்கப்பட்ட மொத்த செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா. 24,508,352 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது மேலும் இத்தகைய தவறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையிலும், திறைசேரி அச்சீட்டு குறிப்புகளிலும் (SA-92) சேர்க்கப்படாத ரூபா. 662,647 பெறுமதியான கடப்பாடுகள் 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளன.	2024 ஆண்டுக்கு ஏற்புடையதாக 2025 சனவரி 31 ஆம் திகதிக்கு பின்னர் ரூபா. 662,647 பெறுமதியான வவுச்சர்கள் பொறுப்புகளாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்க முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	ஆண்டுக்கு ஏற்புடையதான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்றிறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச்செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன். ஆம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்து, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் நிதி கட்டுப்பாடு மற்றும் அந்த மேற்பார்வை நடவடிக்கைகள் அனைத்தும் கணக்காளர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நீதி அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் ஆகியோரின் பங்களிப்புடன் முறையாக நடாத்தப்படுகின்றன. அத்துடன், இந்த முறைமையின் பயன் தொடர்பில் மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடு முறையாக செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அறிக்கையின் 6.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் பிரகாரம் அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை	அரசாங்க நிருவாக அமைச்சின் திணைக்களம் பொருட்டு உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**		
(அ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை**			
	1 ஆம் தொகுதியில், V அத்தியாயத்தில் 7.1 பந்தி மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் xv ஆம் அத்தியாயத்தில் 171 மற்றும் 172 பிரிவுகள்	நிறுவனக் கோவையின் பொருத்தமான பிரிவுகளின் பிரகாரம், நிறுவனத் தலைவருக்கு அறிவிக்காமல் கடமைக்கு சமூகமளிக்காத உத்தியோகத்தர் ஒருவர், தனது பதவியைக் கைவிட்டுச் சென்றதாகக் கருதப்பட்டு, அது குறித்து பதிவுத் தபால் மூலம் உடனடியாக குறித்த உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். ஆயினும், பதவி கைவிடப்பட்டமைக்கான கடிதங்களை திணைக்களத்தின் ஏழு உத்தியோகத்தரகளுக்கு வழங்குவதற்கு திணைக்களம்	அபிவிருத்தி அலுவலர்களின் இணக்கப்பட்டுள்ள பிரதேச செயலகத்தினால் அபிவிருத்தி அலுவலர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற போதிலும், தற்போது அபிவிருத்தி அலுவலர்களின் வருகை மற்றும் வெளியேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சிரேஷ்ட சமூதயாம்சார் சீர்திருத்த	உரிய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும்.

	02 மாதங்கள் முதல் ஒரு வருடத்திற்கு மேலாக தாமதித்துள்ளது.	உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை			
நி.பி. 110	இரு வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து, சேதங்கள் மற்றும் இழப்புகள் பற்றிய பதிவேட்டில் புதுப்பித்தல்கள் செய்யப்படவில்லை	தவறுதலாக சேதங்கள் மற்றும் இழப்புகளின் பதிவேட்டில் (சேர்க்கப்படாமல்) விடுபட்டுள்ளது, மேலும் இந்த ஆண்டில் அந்தத் தகவலைப் பதிவேட்டில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கு அமைய சேதங்கள் மற்றும் இழப்புகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை			
(i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(1) பந்தி	அரச உத்தியோகத்தர் தங்கள் பணித்தளத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளியேறுதலை கைரேகை பதிவு செய்யும் இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டு யூலை 08 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரை பிரதான அலுவலகத்தில் சேவைக்கு சமூகமளித்த ஓர் உத்தியோகத்தர் அவ்வாறு செய்யவில்லை.	தற்போது தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் கைரேகை இயந்திரத்தில் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது	குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கு அமைய சேதங்கள் மற்றும் இழப்புகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ii) 2022 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 14/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையில்	சுற்றுநிருபத்தின்படி மட்டுமே விடுமுறைகள் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு மாறாக ரத்மலானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய	இந்தச் செயலகத்தின் பணிகளுக்காக இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர் ஒருவரை இரத்மலானை பிரதேச செயலாளர் நிராகரித்ததன்	பிராந்திய அலுவலகங்களில் சேவை வழங்குவதற்கு அலுவலர்களை ஈடுபடுத்தப்படுதல்

(II)இல் பந்தி	4.14	உத்தியோகத்தர் ஒருவருக்கு வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், குறித்த உத்தியோகத்தர் கடமையாற்றிய அந்தப் பதவி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வெற்றிடமாக இருந்தமையால் கட்டளைபெறுநர்கள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் அந்த அலுவலகத்தால் மேற்கொள்ளப்படவில்லை.	காரணமாக, அந்த உத்தியோகத்தரை தலைமை அலுவலகத்துடன் இணைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும், சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு இப்போது ஓர் உத்தியோகத்தர் இணைக்கப்பட்டுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.	வேண்டும்.

3.5 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9.1 (ஆ) அத்தியாயத்திற்கும், நிதி ஒழுங்குமுறை 371(5) இற்கும் அமைய, இடைக்கால முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த பணியை முடித்து 10 நாட்களுக்குள் அந்த இடைக்கால முற்பணத்தை மீண்டும் மீளச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 33 உத்தியோகத்தர்கள் 51 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா. 1,320,840 பெறுமதியான இடைக்கால முற்பணத்தைத் தீர்ப்பதற்கு 11 நாட்கள் முதல் 222 நாட்கள் வரையான கால இடைவெளி தாமதப்படுத்தப்பட்டிருந்தது.	இதன் பின்னர் இத்தகைய சந்தர்ப்பங்கள் ஏற்படாபதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.	பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் உரிய திகதிக்கு முன்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	திணைக்களத்தால் வருடாந்தம் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்ட 15,000 கட்டளைகளில், 12,000 கட்டளைகளை ஆண்டிற்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்ட போதிலும், ஆண்டிற்குள் 6,536 கட்டளைகள் மட்டுமே – அதாவது மதிப்பிடப்பட்ட தொகையில் 43 சதவீதம் மட்டுமே நிறைவு செய்யப்பட்டிருந்தது	சமூதயாம்சார் சீர்திருத்தக் கட்டளைகளுக்காக அனுப்பப்படும் கட்டளை பெறுபவர்களில் 12,000 பேரை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கட்டளையின் தன்மை மற்றும் கட்டளைக் காலப்பகுதி, கட்டளை வழங்குவதுடன் தொடர்புடையதாக இருப்பதால், குறித்த ஆண்டிற்குள் அனைத்துக் கட்டளைகளையும் நிறைவு செய்ய முடியாததால், அது எதிர்கால ஆண்டுகளுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. அதன்படி, சட்டத்தின்படி மூன்று மாதங்கள் முதல் 2 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குள் கட்டளைகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.	திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
(ஆ)	சமூதாயம்சார் சீர்திருத்தக் கட்டளைகளுக்கு அமைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக, அந்த வருடத்தில் 315 விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வருடத்தில் 109 நிகழ்ச்சிகள் மட்டுமே, அதாவது 34 வீதம் மட்டுமே, நடாத்தப்பட்டன.	2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைய முடியாவிட்டாலும், இந்தப் திட்டமானது 2025 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியாக அதன் முன்னேற்றங்கள் கண்காணிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.	திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
(இ)	கட்டளைப்பெறுநர்களின் உழைப்பை பயன்படுத்தி வருமானம் ஈட்டும் திட்டங்கள் 9ஐ அந்த வருடத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், உண்மையில் வருடத்தில் 03 திட்டங்கள் மட்டுமே, அதாவது 33	கட்டளைப்பெறுநர்களின் உழைப்பை பயன்படுத்தி வருமானம் ஈட்டும் திட்டங்களை ஆரம்பித்தபோது, விவசாய துறையில் தொடங்கப்பட்ட திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் இல்லாததால், 2025 ஆம் ஆண்டிற்காக பிரதேச	திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

	வீதம் மட்டுமே, நடாத்தப்பட்டன.	மட்டத்தில் பொருத்தமான புதிய திட்டங்கள் (கடித உறைகள் தயாரித்தல்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது	
(ஈ)	செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா. 209,858 இற்கு ஏற்புடையதான 4 பணிகள் ஆண்டுக்குள் செயற்படுத்தப்பட்டிருந்தது.	இந்த நான்கு பணிகளும் அத்தியாவசியமானவை மற்றும் ஒத்திவைக்க முடியாதவை என்பதால், அவை செயற்திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்தபோதிலும், அவற்றைச் செயற்படுத்த வேண்டியிருந்தது. அத்துடன், திருத்தப்பட்ட கொள்வனவுத் திட்டத்திற்கு அமைச்சு செயலாளரின் அனுமதியைப் பெற்ற பின்னரே செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
(உ)	மதிப்பீட்டை சரியாக தயாரிக்காததன் காரணமாக, அந்த வருடத்தில் ரூபா. 300,000 செலவில் 223 வைரஸ் தடுப்பு மென்பொருட்களை (Virus Guards) கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்ட போதிலும், வருடத்தில் ரூபா. 298,894 செலவில் 170 வைரஸ் தடுப்பு மென்பொருட்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத்துடன், ரூபா. 1,000,000 செலவில் 10 கைரேகை இயந்திரங்களைக் (Fingerprint Machines) கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்ட போதிலும், வருடத்தில் ரூபா. 569,350 செலவில் 5 கைரேகை இயந்திரங்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், ரூபா. 500,000 ம் ஒளிநகல் இயந்திரம் (Photocopy Machine) கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும்,	இந்தக் கொள்வனவுகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போதிலும், மதிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமையும், பொருட்களின் விலையில் ஏற்பட்ட ஏற்ற இறக்கமும் காரணமாக எதிர்பார்த்தபடி பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியவில்லை. திருத்தப்பட்ட கொள்வனவு திட்டத்திற்கு அமைச்சு செயலாளரின் அனுமதி கிடைத்துள்ளது என்றும், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை முகாமைத்துவம் செய்து திணைக்களத்தின் தேவைக்கேற்ப சம்பந்தப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது	திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

அதனைக் கொள்வனவு செய்ய ரூபா. 913,320 செலவிடப்பட்டிருந்தது.

4.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அனுராதபுரம், கெக்கிராவ நகரத்தில் சமுதாயம்சார் சீர்திருத்த நிலையம் ஒன்றை அமைப்பதற்காக, அந்த ஆண்டிற்குள் ஒரு மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஆண்டிற்குள் ரூபா. 64,215 ரூபாவை மட்டுமே செலவழித்து, சம்பந்தப்பட்ட காணியில் அளவீட்டுப் பணிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	தற்போது காணியை நிரந்தரமாக ஒப்படைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதுடன், தற்போது சம்பந்தப்பட்ட திட்டத்தின் திட்டமிடல் அறிக்கை, தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தின் (NPD) ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிருமாணிப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
புத்தளம் நீதிமன்றத்தின் சமுதாயம்சார் சீர்திருத்த அலுவலகத்திற்காக நிர்மாணிக்கப்படும் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளுக்காக, சமூக சீர்திருத்தத் திணைக்களத்தின் 2010 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், நீதி அமைச்சினால் ரூபா. 1,009,934 பணம் செலவிடப்பட்டிருந்த போதிலும், கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை.	2010 ஆம் ஆண்டில் இந்தக் கட்டிடத்திற்கான கொள்முதல் நடவடிக்கைகள், ஒப்பந்தம் வழங்குதல் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் நீதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2013 யூன் 26 மற்றும் 2014 யூலை 08 ஆகிய திகதிகளில், இடைநிறுத்தப்பட்ட பகுதியைக் காலதாமதமின்றி மீண்டும் விரைவாகத் திருத்தி வழங்குமாறு அமைச்சுக்கு	நிருமாணிப்பு நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், இன்றுவரை அதற்கான பதில் கிடைக்கவில்லை. இருப்பினும், இது குறித்து மீண்டும் ஒருமுறை நீதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.	

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதானிப்புக்கள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள
(அ)	2018 திசெம்பர் 31 ஆம் திகதியிடப்பட்ட, சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை இல. 04/2018, நிதி அல்லாத சொத்துகளை மதிப்பிடுவதற்கான வழிகாட்டுதலின் 1.3.1 இற்கு அமைய, ஒவ்வொரு வாகனத்திற்கும் 05 வருடங்களுக்கு ஒருமுறை மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வது கட்டாயமான போதிலும், திணைக்களத்தின் 04 வாகனங்களுக்கு அவ்வாறு மதிப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்குச் சொந்தமான 04 வாகனங்களை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு, மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றுநிருபம் பிரகாரம் வாகனங்களை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	மேற்கூறிய வழிகாட்டுதலின் 2.3, 3.3.1 மற்றும் 4.3 ஆம் பந்திகளின்படி, ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒருமுறை காணி மற்றும் கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடம், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் என்பவற்றுக்கு மறுமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்ற போதிலும், திணைக்களத்தினால் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த ஆண்டில் குறித்த மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றுநிருபம் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அரசு அலுவலர்கள் பிணை வைப்பது தொடர்பான 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியில் திருத்தப்பட்ட நிதி பிரமாணக் குறிப்பு 880 இன்படி, அரச அலுவலர்கள் பிணை வைப்பது தொடர்பில், அரச நிதியின் பொறுப்பைப் பாதுகாக்கும் கடமை கணக்கீட்டு அலுவலருக்கு உள்ளமையால், உரிய அலுவலர்கள் பிணை வைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதி பிரமாணக் குறிப்பு 315 இல் பிணை வைப்புச் செய்ய வேண்டிய கணக்காளர், பணத்தைச் சேகரிப்பவர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர் போன்ற பதவிகளை வகிக்கும் அலுவலர்கள் உரிய பிணைப் பணத்தை வைப்பீடு செய்திருக்கவில்லை.	பிணை வைப்புச் செய்ய வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த அலுவலர்களின் விபரங்களும் சம்பந்தப்பட்ட படிவங்களும் பூர்த்தி செய்யப்பட்டு, நிதி அமைச்சின் செயலாளருக்கு 2025 மார்ச் 07 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றுநிருபம் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
புத்தளம் நீதிமன்ற வளாகத்திலுள்ள ஓர் அறையில் இயங்கி வந்த சமூகம்சார் சீர்திருத்த அலுவலகத்தில், 2022 யூன் 21 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், அந்த அலுவலகத்திலிருந்த ரூபா.163,302 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் முழுமையாக அழிந்து போயிருந்தன. ஆனால், இது குறித்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளில் இழப்புகள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	2022 யூன் 21 ஆம் திகதி புத்தளம் சமூகம்சார் சீர்திருத்த அலுவலகம் தீ விபத்து தொடர்பான விசாரணைகள் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் நிறைவடையாததால், இது குறித்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதி அறிக்கைகளிலுள்ள இழப்புகள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதி கூற்றுகளுக்கு ஏற்புடையதான தகவல்கள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சமூகம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் ஒருவர் 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக விடுமுறை பெற்றிருந்தார். அந்த உத்தியோகத்தரின் விடுமுறைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அவர் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி சேவைக்கு சமூகமளிக்கவில்லை. அந்த தினத்திலிருந்து அவர் சேவைக்கு சமூகமளிக்காமல் விட்டமைக்கான அறிவிப்பு 2024 யூன் 04 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த போதும், ஒப்பந்தத்தின்படி அவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,106,560 தண்டப்பணம் இன்று வரை அறவிடப்படவில்லை.	இந்த உத்தியோகத்தரின் நிரந்தர வதிவிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், அவர் தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக நடவடிக்கைகளை அத்திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.	உரிய தண்டப் பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	பிரதேச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தரின் சேவைக்கு வருகை, வெளியேற்றம் மற்றும் விடுமுறை தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை திணைக்களம் முறையாக முகாமைத்துவம் செய்யாததன் காரணமாக, 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிவிக்காமல் சேவைக்கு வராவிட்டாலும், அவர்களுக்கு சம்பளமாக ரூபா. 200,724 பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் அந்தப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அரசிற்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	பிரதேச அலுவலகங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினது நிருவாக நடவடிக்கைகளை சிறந்த வகையில் முகாமைத்துவம் செய்தல் வேண்டும்.
(இ)	புத்தளம் நீதிமன்றத்தில் உள்ள சமூதாயம்சார் சீர்திருத்த அலுவலகம் 2022 யூன் மாதம் மாதத்தில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் அழிந்துள்ளது. மேலும் அலுவலகத்தில் இருந்த கணினி மற்றும் அதன் அனைத்து பாகங்கள், பிரதி எடுக்கும் இயந்திரம் (photocopy machine) கைரேகை	இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கின் முடிவு வரும்வரை ஒரு முடிவை வழங்க முடியாது என்று அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். அதன்படி, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில்	புலனாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்து-வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

	ஸ்கேனர் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் முழுமையாக எரிந்து அழிந்திருந்தன. எனினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும், திணைக்களம் அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை.	மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	அழிவடைந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஒரு தற்காலிக இடத்தைக் கண்டறியவோ அல்லது அரைவாசி கட்டப்பட்ட கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்யவோ திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை.	திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தின் பிரேரணைகளுக்கு அமைய, இந்த அலுவலகத்தை தாபிப்பதற்குப் பொருத்தமான இடமொன்றை வழங்குமாறு நீதி அமைச்சுக்கும் புத்தளம் நீதவான் நீதிமன்றப் பதிவாளருக்கும் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதாகவும், அதன் வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையும் வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	ஏனைய இடமொன்றை கண்டறிவதற்கு அல்லது நிருமாணிப்பு பணிகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக திணைக்களம் நிலைபேறான நோக்கத்தை அடையாளம் கண்டிருந்ததுடன், அந்த நோக்கத்தை அடைவதற்காக மூன்று இலக்குகளை தயாரித்திருந்தது. அவற்றில் சிறிய குற்றங்களுக்காக குற்றவாளிகளாகக் காணப்பட்டு சமுதாயம்சார் சீர்திருத்தத்திற்காக அனுப்பப்படும் நபர்களில் 40 சதவீதமானோரை சமுதாயம்சார் சீர்திருத்தச் செயன்முறையினூடாக நல்லவர்களாக மாற்றுவதை இலக்காகக் கொண்டிருந்த போதிலும், அதன் முன்னேற்றம் 44 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. அத்துடன், போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகளுக்கு	போதைப்பொருள் பாவனைக் குறைபாடுகளைக் கொண்ட குற்றவாளிகளைச் சிகிச்சைச் செயன்முறையில் மேலும் ஒழுங்குபடுத்துவதற்காக, 2024 ஆம் ஆண்டில் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு முன்னர் போதைப்பொருள் பாவனையின் அளவுகளைக் கண்டறிவதற்காக Asist வழிமுறையைப் பயன்படுத்த ஆரம்பித்து, அதற்காக உத்தியோகத்தர்களைப் பயிற்சியளிக்கப்பட்டதாகவும், விசேடமாக போதைப்பொருள் பாவனைக் குற்றவாளிகளின் சிகிச்சைச் சீர்திருத்தச் செயன்முறையின் முன்னேற்றத்தை	நிலைபேறான நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

போதைப்பொருள் சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்களில் 35-40 சதவீதமானோரை மீட்டெடுக்க இலக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், அது 29 சதவீதம் என்ற குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. அதேபோன்று, சமுதாயம்சார் அடிப்படையிலான சீர்திருத்தத்திற்காக அனுப்பப்படும் நபர்களின் சமூக நலனை உறுதிப்படுத்துவதற்காக சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியில் அவர்களை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டிருந்த போதிலும், அந்த இலக்கை அடைவதற்கான இலக்குகள் அடையாளம் காணப்படவில்லை.	அளவிடுவதற்குப் பயனாளி வழிகாட்டி கையேடு ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	

6. நல்லாளுகை

6.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக ஒரு இணையதளம் அமைக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் புதுப்பிக்கப்படவில்லை	இணையதளத்தை உருவாக்குவதற்காக, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவுடன் இணைந்து ஆரம்பக்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	துரிதமாக இணையதளத்தை இற்றைப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(i) பிரிவின்படி, திணைக்களம் ஒரு உள்ளகக் கணக்காய்வு அலகை நிறுவப்படவில்லை.	இந்த திணைக்களத்துக்காக ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் பதவி தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அந்தப் பதவிக்கு இலங்கை கணக்காளர்	கணக்காய்வு சட்டத்திற்கு ஒழுங்கமைதல் வேண்டும்.

	சேவையின் III ஆம் தர அலுவலர் ஒருவரை பொது நிர்வாக அமைச்சு இணைப்புச் செய்யாதபடியால் உள்ளகக் கணக்காய்வு அலகை நிறுவ முடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.	

7. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) பயனுள்ள சேவை மட்டத்தை பேணுவதற்கும், பதவியணி தொடர்பாக காலோசிதமான மீளாய்வை மேற்கொள்வதற்கு இயலாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் சிரேஷ்ட மட்டத்தின் வெற்றிடங்கள் 03 ம், மூன்றாம் நிலை மட்டத்தின் வெற்றிடங்கள் 18 ம், இரண்டாம் நிலை மட்டத்தின் வெற்றிடங்கள் 40 ம் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடங்கள் 03 ம் அடங்கலாக ஒட்டு மொத்தமாக 64 வெற்றிடங்கள் காணப்பட்டன.	சிரேஷ்ட மட்டம் அலுவலகப் பணி உதவியாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக MISCo முறைமை மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. மேலும், உதவி ஆணையாளர் பதவிக்குத் தகுதியான உத்தியோகத்தர்கள் தற்போது இல்லை என்றும், சிரேஷ்ட சமூகச் சீர்திருத்த அலுவலர் பதவிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய 13 சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிகளை நிரப்புவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுபோலவே, இரண்டாம் நிலை மட்டத்திலான 40 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு மீளாய்வுக் குழுவின் ஒப்புதலுக்காக அவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகள் பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்கு ஏற்படையதான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ)	இரண்டாம் நிலை மட்டத்தைச் சேர்ந்த சமூகச் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் வேலை மேற்பார்வையாளர் பதவிகளில் ஏறத்தாழ 30 வெற்றிடங்கள் நிலவுவதால், பிராந்தியச் சீர்திருத்த அலுவலகங்கள் சரியாக இயங்கவில்லை. இதனால், திணைக்களத்தின் முக்கியப் பணியான ஆணை பெற்றவர்களைச் சீர்திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கு அது தடையாக அமைந்துள்ளது.	தற்போது கடமைப் பொறுப்புகளை ஈடுசெய்வதற்காக அலுவலர்களை ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் 13 சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள் மற்றும் 13 வேலை மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தற்போது வெற்றிடங்கள் நிலவும் அலுவலகங்களுக்கு அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான அலுவல்களை பயனுள்ள வகையில் நிறைவேற்றுவதற்காக உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.